# Vietnam: Villagers Build Lives Out of Unexploded Bombs

வியட்நாம்

*வெடிக்காத குண்டுகள் கிராமவாசிகளது ஜீவனோபாயத்திற்குப் பெரிதும் உதவுகின்றன*

**- ஆரொன் கிளான்ஸ் & கொஸ் யூயென் -**

கே சாங், வியட்நாம், நவம். 26 (ஐ.பி.எஸ்.): இப்போது கே சாங்கிற்கு ஊடாகப் பிரயாணம் செய்யும் போது அகில உலகமே அறிந்ததும், அமெரிக்காவினால் கொடூரமாக நடத்தப்பட்டதுமான வியட்நாம் போரின் ஒரு சில ஞாபகச் சின்னங்களை ஒருவர் பார்க்கத் தவறக்கூடும்.

இன்று குவாங்றி மாகாணத்திலுள்ள பட்டினமான கே சாங் உணவகங்களினாலும், சாப்பாட்டுக் கடைகளினாலும் நிரம்பி வழிகிறது. லயோ எல்லையிலிருந்து பொருட்களை ஏற்றிவரும் டிறக் வண்டிகள் பட்டினத்தின் பிரதான வீதிகளில் புகை கக்கிய வண்ணமும், சேற்றை வாரி இறைத்தவாறும் விரைகின்றன.

கே சாங்கிற்கு ஒரு மைல் வெளியில் தார் போடப்பட்ட வீதி மண் வீதியாக மாறியதுடன் மின்சாரப் பாவனையும் முடிவடைகிறது. மலைச்சரிவுகளில் அங்குமிங்குமாகப் பரந்து கிடக்கும் குடிசைகளிலிருந்து புகைவெளிவந்து கொண்டிருக்கிறது.

புறுமலைச் சாதியினரைச் சேர்ந்த ஒரு தொகுதி பெண்கள், பல வர்ணமுள்ள தங்களது சாரங்களை சிறிதளவு உயர்த்திய நிலையில் ஆறொன்றில் குளிக்கிறார்கள். இவர்கள் வியட்நாமின் மத்திய பகுதி மலைப்பகுதியில் வாழும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தமது காலைப் பொழுதை சமைப்பதற்கும், உஷ்ணத்தை உண்டுபண்ணுவதற்கும் வேண்டிய சிறுவிறகுகளைச் செலவழிப்பதில் செலவிட்டனர்.

வீடுகளை பன்றிகளதும், கோழிக் குஞ்சுகளதும் ஒலிகள் நிரப்புகின்றன. ஆனால், மலைப் பிரதேசத்தில் வாழும் மக்கள் இக்கால்நடைகளைக் கொண்டு வாழ்க்கையை நடத்துவதோ, பண்ணைகளை ஆரம்பித்து அந்த வேலைகளில் ஈடுபாடு காட்டுவதோ இல்லை. ஏனெனில் இத்தகைய தொழில்களில் ஈடுபட்டாலும் அவர்களது சூழல் இதற்குப் பாதுகாப்பாக அமையவில்லை.

முப்பது வருடங்களுக்கு முன்னர் அமெரிக்க ஆயுதப்படைகள் ஒரு நூறாயிரம் தொன் நிறையுள்ள குண்டுகளை கே சாங்கைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் வீசியுள்ளன. இவற்றுள் சில ஆயிரம் கிலோகிராம் நிறையுள்ளவை. அமெரிக்கப் படைகள் அனேகமாக எட்டு மில்லியன் கிலோ நிறையுள்ள குண்டுகளை வியட்சாம் மீது பொழிந்துள்ளன.

வியட்நாம் அரசின் கணிப்பின்படி 800,000 குண்டுகளும், எம் 79 மோட்டார் குண்டுகளும் இன்னும் வெடிக்காத நிலையில் நிலத்துள் புதைந்து கிடக்கின்றன.

வெடிக்காத குண்டுகள் அதிகளவுள்ள பிரதேசமான மத்திய வியட்நாமின் 35 வீதமான நிலப்பரப்பு பயிர்ச்செய்கைக்கு உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ளது.

மேலும், வியட்நாம் அரசின் கணிப்பின்படி, 1975ம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின் குண்டு அனர்த்தத்தினால் 38,000 மக்கள் கொல்லப்பட்டு, 65,000 பேர் காயங்களுக்க உள்ளாகியும் உள்ளனர். கண்ணி வெடிகளைத் தடைசெய்யும் சர்வதேச இயக்கத்தின் அறிக்கையின் பிரகாரம் தப்பி உயிர் வாழ்பவர்களுள் மூன்றில் ஒருவர் நாளொன்றுக்கு 30 அமெரிக்க சதங்களுக்கு உட்பட்ட தொகையில் உயிர்வாழ்கின்றார்.

எனினும் இங்கு மக்கள் யுத்தத்தினால் விட்டுச் செல்லப்பட்ட ஒரு வரப்பிரசாதம் உட்பட, சில வழிகளை அனுசரித்து ஜீவனோபாயத்தை நடத்தி வருகின்றனர்.

தனது முழுப்பெயரையும் வெளிப்படுத்த விரும்பாத 21 வயதான ரொங் 3 வருட காலமாக வெடிக்காத குண்டுகளை அகழந்தெடுத்து வருகிறார். அவர் ஐ.பி.எஸ்.சிற்கு "குண்டொன்றைத் திறப்பதற்கு ஒரு சுத்தியலும், உளியும் வேண்டும்" என்று கூறுகிறார். "இதனை விரல்களால் செய்ய முடியாது. உள்ளிருக்கும் எரிபொருளை நிலத்துள் ஊற்றி மூடவேண்டியுள்ளது"

ரொங் இந்தத் தொழிலைத் தனது அயலவர்கள் செய்வதைப் பார்த்து அறிந்து கொண்டார். அவர் நிலத்தில் உள்ள ஒரு பள்ளத்தை கண்டு அதில் கிண்டுவதை ஆரம்பிக்கிறார். அந்தக் குண்டைப் பாதுகாப்பாக மேலே கொண்டு வருவதற்கு 3, 4 நாட்கள் எடுக்கும்.

அது ஆபத்தானதாக இருப்பினும், விரைவில் உணவிற்கான பணத்தைப் பெறுதற்கு இது நல்ல வழியாகும். ஒர முழுதான மோட்டாரை அவர் 100 அமெரிக்க டொலர்களுக்கு விற்க முடியும். அதிலும் பார்க்க சிறிய அளவிலானது குறைந்த தொகைக்கே கொடுக்கலாம்.

ஒரு பன்றியை விற்றுப் பெறப்படும் பணத்திலும் பார்க்க மும்மடங்கு பணத்தை முழுதான குண்டொன்றை விற்று ரொங் பெற்றுக் கொள்கிறார். பன்றியொன்றை வளர்க்க 5 அல்லது 6 மாதங்கள் பிடிக்கும்.

குவாங் டிறி மாகாணத்தில் டக்கொங் கிராமத்தில் வாழும் விவசாயி ருவான், யுத்தம் முடிந்து 10 ஆண்டுகளின் பின்னர் நிலத்தைக் கிண்டிய போது கிடைத்த குண்டொன்று வெடித்ததனால் தனது இடது கரத்தை இழந்தார். அவர் நினைவு கூருவதாவது, "எனது வயலில் மிகப் பல குண்டுகள் இருக்கின்றன. எங்கே கிண்டினாலும் ஒன்று கிடைக்கும்"

ஆரம்பத்தில் ருவானும், அவரது குடும்பத்தினரும் தாங்களே குண்டுகளைக் கிண்டி எடுக்க முயற்சித்தனர். பின்னர் அந்த முயற்சி கஷ்டமானது எனக் கண்டதால், உள்ளூர்த் தோட்டிகளின் உதவியை அவற்றை அகற்ற அவர் நாடினார். "மக்கள் முன்வந்து தாங்கள் குண்டுகளைத் தோண்டி எடுப்பதாகக் கேட்டிகிறார்கள். நன்றாகச் செய்யலாம் என்று நான் கூறியுள்ளேன்"

வியட்நாமின் சட்டப்படி விவசாயிகள் இராணுவத்தின் உதவியை குண்டுகளை அகற்றுவதற்கு நாடமுடியும். ஆனால், அதற்குரிய செலவு அதிகம் - ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் தோண்ட 500 டொலர்களாகும்.

ருவான் மேலும் விளக்குகிறார். "பொதுக்கட்டிடங்கள் அமைக்கப்படவுள்ள இடங்களில் வியட்நாம் அரசாங்கம் குண்டுகளை அகற்றுகிறது" இதனை அவர்கள் கண்களில் கண்ணீர் பனிக்க கூறுகிறார்கள். "பாமர மக்களுக்காக அவர்கள் குண்டுகளை அகற்ற முயற்சி எடுக்கவில்லை. குண்டுகள் மிகப் பரந்த நிலப்பரப்பில் பரந்து இருப்பதனால் அரசாங்கம் யாவற்றையும் தோண்டியெடுக்கும் நிலையில் இல்லை"

ஆனால், அபிவிருத்திப் பணிகள் அதிகரித்துள்ளதனால் அகற்றும் வேலை துரிதமாக்கப்பட்டுள்ளது. அபிவிருத்திப் பணிகள் அதிக அளவு மக்களை நாட்டுப்புறத்துக்க இட்டுச் செல்வதனால் புதிய நிலப்பரப்புக்களில் குண்டுகள் அகற்றப்பட்டு வெடிக்க வைக்கப்படுகின்றன, வெடிக்கின்றன.

உண்மையில், காம்லோ கிராமத்தைச் சேர்ந்த டிறாண்டா ஓ, 15 வயதாக இருக்கும் போது பாடசாலையில் பூச்செடிகள் நட்டுக் கொண்டிருக்கும் போது குண்டொன்று வெடித்ததனால் பாதிக்கப்பட்டார். இப்பொழுது மற்றவர்களுடன் சேர்ந்து கிழக்கு, மேற்குப் பெருந்தெரு அமைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கும் அவர் குண்டுகளின் பெயரை உச்சரித்த போதே நடுக்கமடையிறார்.

கடந்த தசாப்தங்களில் வியட்நாமில் மேற்கொள்ளப்பட்ட பெருமளவிலான பாரிய மாற்றங்களை இப்பெருந்தெரு வெளிப்படுத்தி நிற்பதுடன் அது அயல்நாடுகளுடன் ஏற்படுத்தியுள்ள தொடர்புகளையும் காட்டுகிறது. மத்திய மேற்குக் கரையிலிருக்கும் டொங்காவிலிருந்து ஆரம்பமாகும் இவ்வீதி லயோவினது எல்லையிலுள்ள லயோ பயோவைச் சென்றடைகிறது. வியட்நாம் லயோஸ் உடனும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுடனும் வர்த்தகத் தொடர்புகள் ஆரம்பிக்கும் போது ஒரு முக்கிய இணைப்புப் பாதையாக விளங்கவுள்ளது.

டயோ மேலும் கூறுவதாவது, "அவர்கள் பெருந்தொகையானவற்றை அதற்றியிருப்பினும், முழுதும் அகற்றப்பட்டதற்கு உத்தரவாதம் இல்லை. எனவே எனக்கு ஒவ்வொர்ரு நாளும் கிண்டப் பயமாக இருக்கிறது"

கே சாங்கிற்கு அப்பால் 4 மைல்கள் தூரத்தில் ஒரு குடிசையில் வசிக்கும் கியென் ரோய் ஒரு கோப்பி விவசாயி. ஆனால், அவரது பிரதான வர்த்தகம் வெடிக்காத குண்டுகளை வாங்குகிறார். அடையாளம் இடுகிறார். நகரங்களிலுள்ள வர்த்தகர்களுக்கு அவற்றை விற்கிறார். அவர்கள் அவைகளை உருக்கி கட்டிடப் பொருட்களைச் செய்கிறார்கள். அவர் தனக்கெனவும் சிலவற்றை வைத்துக் கொள்கிறார். அவரது படுக்கையின், மேசையின் கால்கள் வெடிக்காத குண்டுகளால் செய்யப்பட்டுள்ளன. ஆனால் வெடிக்காத குண்டுகளின் பகுதிகள் கால்களாகப் பாவிக்கப்படவில்லை.

சிறிது தூரத்தில் கட்டுவேலை செய்வோர் வெடிக்காத குண்டுகளை உபயோகித்து வார்க்கப்பட்ட உருக்குத் தகடுகள் கொண்டு ஒரு அறையைக் கொண்ட வீடொன்றை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மத்திய வியட்நாமில் கட்டுவேலை செய்வோர் மரத்தினால் வீடுகளைக் கட்டினார்கள். ஆனால் அமெரிக்க விமானங்கள் காடுகள் அழியக்கூடிய தூள்களைத் தூவிய காரணத்தினால் மரங்கள் அழிந்துள்ளன.

அரசின் கணிப்பின்படி 30 ஆண்டுகள் போர் முடிந்து கழிந்த பின் 2 மில்லியன் ஏக்கர் வயல் நிலங்களும், காட்டுப் பிரதேசமும் தரவைகளாக அழிந்துள்ளன. கிராம மக்களும், மர வர்த்தக ஸ்தாபனங்களும் மரங்களை வெட்டி அழித்துள்ளன.

உடையாத குண்டுகள் கொண்டு வீடுகள் கட்டுவது புதியதொன்றல்ல. நிஜமான உருக்கிலும் பார்க்க அரை விலைக்கே கிடைக்கும் என்றும் இந்த வளம் குறையாது ஏனெனில், அமெரிக்கா பெருமளவு குண்டுகளை வியட்நாமில் வீசியுள்ளது.

(End/Copyright IPS)